# பெரம்பலூர் நகராட்சி

**2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் – 30-ம் நாள் வியாழக்கிழமை**

**காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது செப்டம்பர் 2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 612<br>பதிவு செய்யப்பட்டது |
| 30.09.2021 | **பொருள் 02 :** பெரம்பலூர் நகராட்சி பொறியாளர் அவர்களது செப்டம்பர் 2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 613<br>பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr>
<td>30.09.2021</td>
<td>
பொருள் 03 : மனுதாரர் திருமதி.ரா.சுசீலா க/பெ நாகராஜன் என்பவர் அரணாரை தெற்கு கிராம புல எண்.122/25,26,27-ல் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறை செய்து தருமாறு கோரியுள்ளார். மேற்படி இடத்திற்கு பெரம்பலூர் மண்டல நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், செயல்முறை கடிதம் ந.க.எண்.82/2021, பெரம்பலூர் மண்டலம் நாள் 07.06.2021 மற்றும் கொ.அ.ஒ.ம.வ./ ந.ஊ.உ.இ.(பெ.ம) எண்.03/2021-ல் கீழ்கண்ட விவரப்படி அரணாரை தெற்கு கிராம புலஎண்.122/25,26,27-ல் 8 முதல் 19 வரையிலான மனைகளை வரன்முறைப்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>
“ பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம் / நகராட்சி , அரணாரை தெற்கு கிராமம், ச.எண். 122/12பி2ஏ1 (பா). 12பி2பி , 12பி2சி, 23–ல் 0.795 ல் அமைந்துள்ள “ தங்கமயில் நகர் ” அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (பெ.ம) எண். 03/2021 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>மனைப்பிரிவின் மொத்த பரப்பு</td><td>:</td><td>0.795 ஏக்கர் (அ) 34630.20 ச.அடி</td></tr>
<tr><td>மொத்த மனைகளின் எண்ணிக்கை</td><td>:</td><td>20</td></tr>
<tr><td>விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை</td><td>:</td><td>07</td></tr>
<tr><td>விற்கப்பட்ட மனை எண்கள்</td><td>:</td><td>மனை எண்கள் 1 – 7</td></tr>
<tr><td>விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை</td><td>:</td><td>13</td></tr>
<tr><td>விற்கப்படாத மனைகளின் எண்கள்</td><td>:</td><td>மனை எண்கள் 8 –20<br>(மனை எண். 20 பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது )</td></tr>
<tr><td>விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு</td><td>:</td><td>17291.90 ச.அடி</td></tr>
<tr><td>திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு</td><td>:</td><td>1939.30 சதுர அடி …….. (10.08 % )<br>(OSR மனை எண். 20 )</td></tr>
</table>
<br>
செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம் :<br>
1) பரிசீலனைக் கட்டணம் :<br>
<table>
<tr><td>இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ. 500/– வீதம் பரிசீலனைக்கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம்</td><td>13 மனைகளுக்கு (ரூ.6,500/– ரூபா ஆறாயிரத்து ஐநூறு மட்டும் )</td></tr>
</table>
பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு இவ்வலுவலகத்தின் உரிய கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ( ICICI Bank A/C No: 365601000707)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.614<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

2) வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :

பார்வை **6–**ல் சுட்டிய அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உள்ளாட்சியால் உரிய கட்டணம் கணக்கீடு செய்ததை விண்ணப்பதாரருக்கு தெரிவித்துக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு :

| | |
|---|---|
| 0217- Urban Development – 60 Other Urban Development Schemes – 800 other Receipts – AT Receipts Under Regularization charges of Unapproved layout and Plots- DTCP 27 Non- Taxation Fees – 30 Regularsation (D.P.C: 0217-60-800-AT-2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காண் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். ”

மனுதாரர் திருமதி.சுசீலா க/பெ நாகராஜன் என்பவர் பெரம்பலூர் மண்டலம் நகர்ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு பெரம்பலூர் சார்பதிவாளர் அலுவலக இனாம் சாசன ஆவண எண்.**2398/2021**, நாள் **26.04.2021–**ன் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடத்தினை ஒப்படைப்பு செய்துள்ளனர்.

மேலும், மேற்படி மனைப்பிரிவில் பொது உபயோக பயன்பாட்டிற்கான சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடத்தினை பெரம்பலூர் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் இனாம் சாசன ஆவண எண். **4823/2021**, நாள் **03.09.2021** ன் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளனர்.

**இனாம் சாசனம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு :-**

**1–வது தாக்கு:** 40 அடி உள்ள பெரம்பலூர்– அரணாரை பிரதான தார்சாலைக்கும் கிழக்கு சர்வே எண். 122/13A, 13C,13E- க்கும் மேற்கு மனை எண்கள். 1 முதல் 5– க்கும் தெற்கு மனை எண்கள் 6 முதல் 10 – க்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி இருபுறமும் 145 அடி தென்வடல் ஜாதியடி இருபுறமும் 20 அடி உள்ள 2900 சதுரடி மட்டும்

**2–வது தாக்கு:** 40– அடி உள்ள பெரம்பலூர் – அரணாரை பிரதான தார்சாலைக்கும் கிழக்கு சர்வே எண்கள் 122/13A, 13C,13E- க்கும் மேற்கு மனை எண்கள் 11 முதல் 15 – க்கும் தெற்கு, மனை எண்கள் 16 முதல் 19க்கும், பூங்காவிற்கும் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி வடபுறம் 145 அடி தென்புறம் 144.6 அடி தென்வடல் ஜாதியடி இருபுறமும் 24 அடி உள்ள 3499 சதுரடி மட்டும் ,

**3–வது தாக்கு:** மனை எண். 19– க்கும் கிழக்கு, சர்வே எண். 122/13A, 13C,13E- க்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி இருபுறமும் 37 அடி தென்வடல் ஜாதியடி கீழ்புறம் 53.3 அடி மேல்புறம் 51.6 அடி உள்ள 1939.30 சதுரடி கொண்ட பூங்கா (பொது இடம்)

எனவே, மேற்படி அரணாரை தெற்கு கிராம புலஎண்.122/25,26,27-ல் பெரம்பலூர் மண்டலம் நகர்ஊரமைப்புதுறை, உதவி இயக்குநர், அவர்களில் செயல்முறைகளில் தெரிவித்துள்ள வரன்முறை கட்டணத்தை பாரத மாநில வங்கியிலும், வளர்ச்சி கட்டணத்தை நகராட்சி கருவூலகத்திலும் செலுத்திய பின்னர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் கடிதத்தில் சுட்டியுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 8 முதல் 19 வரை எண்ணிட்ட அனுமதியற்ற மனைகளை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம் .

**ந.க.எண்.004141/2021/F1**

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் 04 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில் முதல் தளத்தின் கிழக்கு பகுதி கடை எண். 03, வரிவிதிப்பு எண். 089/00378 ன் உரிமம் திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன், என்பரின் பெயரில் உள்ளது. மேற்படி கடையின் உரிமையாணைதாரர் திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன், என்பவரும் திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்ற இருவரும் மேற்படி கடையில் கூட்டாக தொழில்நடத்தி வருவதாகவும், தற்போது திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை தனது பெயரில் மாற்றி தருமாறும் திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவர் 15.09.2021 ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.<br>திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன், என்பவர் தானும் திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவரும் மேற்படி கடையில் கூட்டாக வியாபாரம் செய்து வந்ததாகவும், தற்பொழுது தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையின் உரிமத்தை தனது வியாபார கூட்டாளி திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திட சம்மதம் தெரிவித்து நோட்டரி பப்ளிக் (Notary Public) மூலம் அத்தாட்சி செய்யப்பட்ட முத்திரை தாளில் உறுதி மொழி பத்திரம் அளித்துள்ளார்.<br><br>இது தொடர்பாக வருவாய் ஆய்வரின் 15.9.2021 ம் தேதிய நேராய்வு குறிப்பிலும், மேற்படி கடையின் உரிமத்தை திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவர் பெயரில் மாற்றம் செய்திட பரிந்துரை செய்துள்ளார். அதனை தொடர்ந்து, மேற்படி இரண்டு நபர்களையும் 17.9.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைத்து விசாரணை செய்ததில் மேற்படி கடையின் உரிமத்தை தனது வியாபார கூட்டாளி திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திட திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன், என்பவர் சம்மதம் தெரிவித்து வாக்கு மூலம் அளித்துள்ளார். மேற்படி பெயர் மாற்ற விண்ணப்பம் நோட்டரி பப்ளிக் மூலமான உறுதி மொழிப்பத்திரம், வருவாய் ஆய்வரின் நேராய்வு அறிக்கை மற்றும் நேரடி விசாரணையின் மூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.3.7.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பழைய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில் முதல் தளத்தின் கிழக்கு பகுதி கடை எண். 03, வரிவிதிப்பு எண். 089/00378–ன் உரிமத்தினை திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன், என்ற பெயரிலிருந்து திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:–**<br>அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.3.7.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டும் அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர்மாற்றம் செய்துதர அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நெறிமுறைகளின்படி பெயர்மாற்ற விண்ணப்ப கட்டணம் ரூ.500/–, 12 மாத வாடகை தொகைக்கு இணையான பெயர்மாற்ற கட்டணம், 12 மாத வாடகை தொகைக்கு இணையான குத்தகை முன்பணம் ஆகியவற்றை வசூலித்துக்கொண்டு மேற்படி கடையின் உரிமையாணையை திரு.R.பிரபு, த/பெ. ராஜேந்திரன், என்ற பெயரிலிருந்து திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.5191 /2021 / அ2** | நகர்மன்றத் தீர்மான எண். 615 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் 05 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில் கடை எண். **02** வரிவிதிப்பு எண். **089/00295** ன் உரிமம் திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்பரின் பெயரில் உள்ளது. மேற்படி கடையின் உரிமையாணைதாரர் திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்பவரும் திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்ற இருவரும் மேற்படி கடையில் கூட்டாக தொழில்நடத்தி வருவதாகவும், தற்போது திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை தனது பெயரில் மாற்றி தருமாறும் திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவர் 15.09.2021 ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.<br>திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்பவர் தானும் திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவரும் மேற்படி கடையில் கூட்டாக வியாபாரம் செய்து வந்ததாகவும், தற்பொழுது தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையின் உரிமத்தை தனது வியாபார கூட்டாளி திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திட சம்மதம் தெரிவித்து நோட்டரி பப்ளிக் (Notary Public) மூலம் அத்தாட்சி செய்யப்பட்ட முத்திரை தாளில் உறுதி மொழி பத்திரம் அளித்துள்ளார்.<br>இது தொடர்பாக வருவாய் ஆய்வரின் **15.9.2021** ம் தேதிய நேராய்வு குறிப்பிலும், மேற்படி கடையின் உரிமத்தை திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி, என்பவர் பெயரில் மாற்றம் செய்திட பரிந்துரை செய்துள்ளார். அதனை தொடர்ந்து, மேற்படி இரண்டு நபர்களையும் **17.9.2021** அன்று நேரடி விசாரணைக்கு அழைத்து விசாரணை செய்ததில் மேற்படி கடையின் உரிமத்தை தனது வியாபார கூட்டாளி திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்திட திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்பவர் சம்மதம் தெரிவித்து வாக்கு மூலம் அளித்துள்ளார். மேற்படி பெயர் மாற்ற விண்ணப்பம் நோட்டரி பப்ளிக் மூலமான உறுதி மொழிப்பத்திரம், வருவாய் ஆய்வரின் நேராய்வு அறிக்கை மற்றும் நேரடி விசாரணையின் மூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அரசாணை எண்.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**3.7.2007**ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பழைய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில் கடை எண். **02** வரிவிதிப்பு எண். **089/00295**–ன் உரிமத்தினை திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்ற பெயரிலிருந்து திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு:–</u>**<br>அரசாணை எண்.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**3.7.2007**ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டும் அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர்மாற்றம் செய்துதர அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி நெறிமுறைகளின்படி பெயர்மாற்ற விண்ணப்ப கட்டணம் ரூ.**500/–**, **12** மாத வாடகை தொகைக்கு இணையான பெயர்மாற்ற கட்டணம், **12** மாத வாடகை தொகைக்கு இணையான குத்தகை முன்பணம் ஆகியவற்றை வசூலித்துக்கொண்டு மேற்படி கடையின் உரிமையானையை திருமதி. மு. பர்வின்பானு, க/பெ. முபாரக் அலி, என்ற பெயரிலிருந்து திரு. மு.அசாருதீன் த/பெ முபாரக் அலி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.5192 /2021 / அ2</u>** | நகர்மன்றத் தீர்மான எண். **616**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.09.2021** | **பொருள் 06 :** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சுத்தம் செய்திட 15 வது மத்திய நிதி குழு 2020 - 2021 ன் (15 CFC Fund) கீழ் "**ரோபாட் இயந்திரம்**" வாங்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 23.02.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிட விளம்பர அறிவிப்பு **Bright Advertising** என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கான பட்டியல் தொகை ரூ. 18848/– (பில்எண்.10172 நாள். 05.02.2021 ) வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகை விளம்பரம் வெளியிட்ட **Bright Advertising** என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:–**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண். 005491/2020/ இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 617 அனுமதிக்கப்பட்டது |
| **30.09.2021** | **பொருள் 07 :** இந்நகராட்சியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்ஆய்வுக்கூட்டங்களின் வாயிலாகவும், துணை இயக்குநர், சுகாதார பணிகள், பெரம்பலூர் அவர்களின் ந.க.எண். 3072/அ4/2019 நாள். 21.05.2021 மற்றும் 12.06.2021 –ம் தேதிய கடிதங்கள் வாயிலாகவும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் டெங்கு, சிக்கன்குனியா நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழு ஒழிப்பு பணி, புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் கிரிமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள ஒரு வார்டுக்கு 2 களப்பணியாளர்கள் வீதம் 42 களப்பணியாளர்களை தற்காலிகமாக நியமித்து பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சி மன்ற தீர்மானம் எண். 324 நாள். 30.06.2020 –ல் 60 நாட்களுக்கும், தீர்மானம் எண். 374 நாள். 31.08.2020–ல் 89 நாட்களுக்கும், தீர்மானம் எண். 442 நாள். 31.12.2020 –ல் 60 நாட்களுக்கும் மற்றும் தீர்மானம் எண். 547 நாள். 30.06.2021 –ல் 89 நாட்களுக்கும் அனுமதி பெற்று செப்டம்பர் 2021 –ம் மாதம் வரைடெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.<br>தற்போது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் மற்றும் துணை இயக்குநர், சுகாதார பணிகள், பெரம்பலூர் அவர்களின் கடிதத்தின்படி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியினை 42 களப்பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள 90 நாட்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்கவும் மேலும் மேற்கண்ட பணியினை ஏற்கனவே களப்பணியாளர்களை வழங்கி செய்து வந்த Our Land Engineering works Pvt Ltd., மூலமே மேற்கொள்ளலாம் என துப்புரவு ஆய்வர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு சம்மத கடிதம் கோரியதில் 24.09.2021 –ம் தேதியில் மேற்கண்ட நிறுவனம் பழைய ஊதிய விகித அடிப்படையில் 42 களப்பணியாளர்களை 90 நாட்களுக்கு வழங்க சம்மத கடிதம் அளித்துள்ளனர். | நகர்மன்றத் தீர்மான எண். 618 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கண்டவாறு வரப்பெற்ற சம்மத கடிதத்தினை தொடர்ந்து 42 களப் பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் 90 நாட்களுக்கு அமர்த்தும் நிலையில் உத்தேசமாக (42 X 337 = 14154 x 90 = 12,73,860/–) ரூ. 13,00,000/– (ரூபாய் பதிமூன்று லட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை மற்றும் துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 42 களப்பணியாளர்களை கொண்டு 90 நாட்கள் டெங்கு தடுப்பு பணி மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட டெங்கு தடுப்பு பணிக்கு 90 நாட்களுக்கு 42 தினக்கூலி பணியாளர்ளை ஏற்கனவே ஒப்பந்த பணியாளர்களை பொது சுகாதார பிரிவிற்கு வழங்கி வரும் Our Land Engineering works Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 13,00,000/– ஐ வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 2762/எச்1/2020</u>** | |
| 30.09.2021 | **பொருள் 08 :** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் சோடியம் 250 வாட்ஸ் ( Sodium Vapour) விளக்குகளை LED விளக்குகளாக மாற்ற மதிப்பீடு தொகை **ரூ.** 48.00 இலட்சமும், இந்நகராட்சி விரிவாக்க பகுதிகளில் புதியதாக LED விளக்குகள் அமைக்க ரூ. 110 இலட்சமும், மற்றும் முக்கிய சாலைகளில் சாலை மைய விளக்குகள் (Centre Median) விளக்குகள் அமைக்க **ரூ.** 75.00 இலட்சத்திற்கு மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 5653 /2021/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 619 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2021 | **பொருள் 09 :** இந்நகராட்சி பொது சுகதாரபிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் சீருடை அணியும் பணியாளர்களுக்கு 2021–22–ம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்கவும் மேலும் தூய்மை பணியாளர்களுக்கு காலனிகள் வாங்க மற்றும் சீருடை தைக்க தையற்கூலியும் வழங்கவும் வேண்டியுள்ளது. எனவே துப்புரவு ஆய்வர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு அரசு நிறுவனமான கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் சீருடைகள் வாங்கவும், மற்றும் காலனிகள் வாங்க, தையற்கூலி வழங்குவதற்கு உண்டாகும் ரூ. 1,00,000/– உத்தேச செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு : -</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி சீருடைகள் கொள்முதல் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 5229/எச்1/2010</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 620 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>30.09.2021</td>
<td>பொருள் 10 : எழில்மிகு அரசு அலுவலகம் என்ற தலைப்பில் அரசு அலுவலங்களை தூய்மையாக பராமரிப்பது தொடர்பாக இந்நகராட்சியின் அலுவலக வளாகம் , அலுவலகர்களின் பிரிவு அலுவலகம் கோப்புகளை அழகாக அடுக்கி வைத்து பணிபுரிதல் , பயனற்ற , தேவையற்ற நாற்காலிகளை அப்புறப்படுத்துதல் , பயன்பாடற்ற கணிணிகள் உரிய வழிமுறைகளோடு அப்புறப்படுத்துல் , மின் கழிவுகளை அப்புறப்படுத்துதல் அலுவலக கழிவறைகளை சுத்தப்படுத்துதல் , கிருமி நாசினிகள் தெளித்தல் மற்றும் தேவைற்ற உடைந்த பொருட்களை ஏலம் மூலம் அதிக ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு : -</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br><u>ந.க.எண். 4630/2021/இ1</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 621<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>பொருள் 11 : இந்நகராட்சியின் 15th CFC (15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை) 2020- 2021 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ல் உள்ள கல்யாண் நகர் விடுப்பட்ட மற்றும் விரிவாக்க பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பிற்கான பிரதான குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகள் அமைக்கும் பணிக்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும்வைக்கப்படுகிறது.<br>மதிப்பீடு தொகை : 9.60 இலட்சம்
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. ஸ்ரீசுவாமி எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>838792.41</td><td>(–) 0.18%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s. ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஏஜென்சிஸ் , பெரம்பலூர்</td><td>842228.14</td><td>0.22 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு : -</u><br>1. மேற்கண்ட பணிக்கு திரு. ஸ்ரீசுவாமி எலக்ட்ரிகல்ஸ் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட(–) 0.18%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br><u>ந.க.எண் : 002309/2021/இ1</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 622<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் 12 :** இந்நகராட்சியின் 15th CFC **(15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை) 2020- 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட விடுப்பட்ட மற்றும் விரிவாக்கப்படுத்தப்பட்ட பகுதிகளான வார்டு எண் **6** தில்லை நகர் மற்றும் வார்டு எண் **11** ல் உள்ள வெங்கடேசபுரம் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுவதற்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**மதிப்பீடு தொகை : 9.60 இலட்சம்**<br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr><tr><td>1</td><td>திரு. ஹரிகரன் ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>827348.00</td><td>(–) 0.17% மதிப்பீட்டை விட குறைவு</td></tr><tr><td>2</td><td>திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர், சென்னை</td><td>830748.50</td><td>0.24 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr></table><br>**அலுவலக குறிப்பு : -**<br>1. மேற்கண்ட பணிக்கு திரு. ஹரிகரன் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.17%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண் : 002903/2021/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 623 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2021 | **பொருள் 13:** இந்நகராட்சியின் 15th CFC **(15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை) 2020- 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** ல் உள்ள ஆலாம்பாடி ரோடு , அன்பு நகர், வார்டு எண் 7 புதிய மதனகோபாலபுரம், வார்டு எண் **8** ராஜா நகர் மற்றும் வார்டு எண் **19** பெருமாள் கோயில் தெரு விடுப்பட்ட மற்றும் விரிவாக்க பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பிற்கான பிரதான குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**மதிப்பீடு தொகை : 9.80 இலட்சம்**<br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr><tr><td>1</td><td>திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>856294.95</td><td>(–) 0.22% மதிப்பீட்டை விட குறைவு</td></tr><tr><td>2</td><td>M/s. V.B. sociates ஒப்பந்ததாரர், சென்னை</td><td>861854.30</td><td>0.42 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr></table><br>**அலுவலக குறிப்பு : -**<br>1. மேற்கண்ட பணிக்கு திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.22%,குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண் : 002903/2021/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 624 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>30.09.2021</td>
<td>
பொருள் 14 : இந்நகராட்சியின் 15th CFC (15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை)2020- 2021 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 ல் உள்ள ரோஸ்நகர் பிரதான தெருக்களில் விடுப்பட்ட மற்றும் விரிவாக்க பகுதியில் உள்ள பாதாள சாக்கடை இணைப்பிற்கான பிரதான குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுவதற்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீடு தொகை : 9.80 இலட்சம்
<table>
<tr><th>வ.எ ண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>856294.95</td><td>(–) 0.22% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s. V.B. sociates ஒப்பந்ததாரர், சென்னை</td><td>861854.30</td><td>0.42 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு : -</u><br>
1.மேற்கண்ட பணிக்கு திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.22%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண் : 002903/2021/இ1</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 625 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>
பொருள் 15:இந்நகராட்சியின் 15th CFC (15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை) 2020 - 2021 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 ல் உள்ள ரோஸ்நகர் குறுக்கு தெருக்களில் விடுப்பட்ட மற்றும் விரிவாக்க பகுதியில் மற்றும் டயானா நகர் பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பிற்கான பிரதான குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீடு தொகை : 9.95 இலட்சம்
<table>
<tr><th>வ.எ ண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>877258.54</td><td>(–) 0.09% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s. V.B. sociates ஒப்பந்ததாரர், சென்னை</td><td>881620.47</td><td>0.41 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு : -</u><br>
1. மேற்கண்ட பணிக்கு திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.09%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண் : 002903/2021/இ1</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 626 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

30.09.2021

**பொருள் 16:**இந்நகராட்சியின் 15th CFC **(15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை) 2020- 2021**ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட விடுப்பட்ட மற்றும் விரிவாக்கப்படுத்தப்பட்ட பகுதிகளான வார்டு எண்**9** , துறைமங்கலம் ITI பின்புறம் மற்றும் வார்டு எண் **1** ல் உள்ள துறையூர் சாலை Infant jesus Hospital பின்புறம் குடிநீர் விநியோக குழாய்கள் புதியதாக அமைத்து குடிநீர் விநியோகமம் செய்வதற்கும் மற்றும் இதர பணிக்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 5.10 இலட்சம்**

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர்களின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | திரு. ஸ்ரீசுவாமி எலக்ட்ரிகல்ஸ் ஒப்பந்ததாரர் , பெரம்பலூர் | 433877.00 | (–) 0.43% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஏஜென்சிஸ் , பெரம்பலூர் | 437148.00 | 0.32 % மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு : -</u>**

**1.**மேற்கண்ட பணிக்கு திரு. ஸ்ரீசுவாமி எலக்ட்ரிகல்ஸ் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.43%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**<u>ந.க.எண் : 002309/2021/இ1</u>**

நகர்மன்றத் தீர்மான எண். 627 அனுமதிக்கப்பட்டது

---

30.09.2021

**பொருள் 17:**இந்நகராட்சியின் 15th CFC **(15 வது மத்திய நிதி குழு - இரண்டாம் தவணை) 2020 - 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 ல் உள்ள ரோஸ்நகர் கழிவு நீர் தொட்டியிருந்து ரோவர் ஆர்ச் பகுதி வரை புதியதாக பிரதான குழாய் அமைத்து கழிவு நீரினை வெளியேற்றும் பணி மேற்கொள்ளுவதற்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 9.50 இலட்சம்**

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர்களின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஜெயந்தி ஒப்பந்ததாரர் , பெரம்பலூர் | 813049.50 | (–) 0.15% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. V.B. sociates ஒப்பந்ததாரர், சென்னை | 817267.00 | 0.37 % மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு : -</u>**

**1.** மேற்கண்ட பணிக்கு திருமதி. ஜெயந்தி பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.15%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**<u>ந.க.எண் : 002903/2021/இ1</u>**

நகர்மன்றத் தீர்மான எண். 628 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் 18:**அரசாணை எண் (NS) 71 நாள்13.09.2021 ல் தெரிவிக்கப்பட்டுள்ள நீர் நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல் , மரம் நடுதல் , பள்ளிகூடம் மேம்படுத்துதல், பொது சுகாதரமையம் , கற்றல் மையங்கள் , சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட இத்திட்டத்தினை அரசாணையில் உள்ள நெறிமுறைகளின் படி இந்நகரில் முழுமையாக செயல்படுத்திட வேண்டி பொது மக்களுக்கு இத்திட்டம் குறித்து விழப்புணர்வு ஏற்படுத்திடவும், அனைவரும் அறிவும் வகையில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மகளிர் குழுக்களை கொண்டு பொது மக்களுக்கு அறியும் வண்ணம் , அறிவிப்புகள் , சுவரொட்டிகள் , துண்டு பிரச்சாரங்கள் விநியோகம் செய்தல், மற்றும் நகராட்சி வாகனம் மூலம் விளம்பரம் செய்திடவும் , மேற்படி பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண். 005166/2021/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 629 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2021 | **பொருள் 19:**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்ட சென்னை பெரு நகர மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் . பேரூராட்சிகளில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் நீர் நிலைகள் புனரமைத்தல் , பூங்காக்கள் அமைத்தல், பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல் , மரம் நடுதல் , பள்ளிகூடங்களை மேம்படுத்துதல், பொது சுகாதார மையம், கற்றல் மையங்கள், சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட **“ நமக்கு நாமே திட்டம்”** செயல்படுத்திட வேண்டி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை அரசாணை எண் (MS) எண். 71 நாள். 13.09.2021ல் வெளியீடு செய்யப்பட்டுள்ளதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண். 005166/2021/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 630 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2021 | **பொருள் 20:** இந்நகராட்சியின் 15 CFC ( II Instalment ) - **2021 - 2022** ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்படி பணிகளுக்கு 14.09.2021 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிட விளம்பர அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்கள் வழியாக R.Gururaj , daily Thanthi Area Reporter என்ற நிறுவனம் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கான பட்டியல் தொகை ரூ. 23184/– (பில்எண். DT 103/21-22 நாள்.25.08.2021) வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகை விளம்பரம் வெளியிட்ட R.Gururaj , daily Thanthi Area Reporter என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண். 002903/2021/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 631 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் 21:** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **01** முதல் **21** வரையுள்ள திறந்த வெளி கிணறுகள், பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியர் பிரிவில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதால் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.**9.80**/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 3231/2021/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 632 அனுமதிக்கப்பட்டது |
| 30.09.2021 | **பொருள்22:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **1** முதல் **21** வரையுள்ள பகுதியில் விநியோகம் செய்யப்படும் கொள்ளிடம் கூட்டு குடிநீரில் திரவ குளோரின் ( Liquid Chlorin) கலந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு விநியோகம் செய்யப்படும் திரவ குளோரின்அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதால் அதனை வாங்கி இருப்பில் வைக்க ரூ.9.80/-இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 3230/2021/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 633 அனுமதிக்கப்பட்டது |

// ஒம் // திரு . S. குமரிமன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி